# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil

www.maveerarnaal.ch trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**7 வயதுப்பிரிவு**

(01.01.2012 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

## தாய்மொழிகள் நாள்

ஓர் இனத்தின் அடையாளங்களுள் முதன்மையானது தாய்மொழி. அகிலமெங்கும் பேசப்பெறும் தாய்மொழிகளையும், அவற்றின் சிறப்புகளையும் பேணுதல், தாய்மொழி மூலமான கல்வியின் பயன்களை அறிதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது தாய்மொழிகள் நாளாகும். ஆண்டுதோறும் பெப்ரவரித் திங்கள் இருபத்தோராம் நாள் இது கொண்டாடப்பெறுகிறது.

தாய்மொழியில் சிறந்த அறிவைப் பெற்றுக்கொள்ளும் குழந்தை, ஏனைய மொழிகளையும் இலகுவாகக் கற்றுக்கொள்ளும் என ஐக்கிய நாடுகள் அவையின் யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது. நாம் புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளின் அரசுகளும் தாய்மொழிக் கல்விக்குத் தேவையான வசதிகளை வழங்கி வருகின்றன.

பல மொழிகளைக் கற்கின்ற வாய்ப்பினைப் பெற்ற குழந்தைகளாக வளர்ந்து வரும் நாங்கள், தாய்மொழியாம் தமிழ்மொழியை விருப்புடன் கற்பதற்கு வழிகாட்டித் துணையாக நிற்கும் அனைவரையும் நன்றியோடு பாராட்டுகின்றோம். தமிழ்க் குழந்தைகளாகிய நாம் தாய்மொழிக் கல்வியின் தேவையையும் பயனையும் நன்றாக விளங்கிக் கொள்கின்றோம்.

நாம் எமது தாயகத்தையும், எங்கள் இனத்தின் வரலாறுகளையும், பண்பாட்டினையும், கலைகளையும் நன்கு அறிந்து பின்பற்றுவதற்கும், அடுத்த தலைமுறைக்கு அதனைத் தக்கவாறு கையளிப்பதற்கும் தாய்மொழிக்கல்வி எமக்கு உறுதுணையாக உள்ளது என்பதனைப் பதிவு செய்கின்றோம்.

“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

நன்றி,

வணக்கம்.